



# தமிழ் மக்கள் குரல்

தினசரி காலை நாளிதழ்

tamilmakkalkurall@gmail.com

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி







## பெரம்பூரில் எம்எல்ஏ அலுவலகத்துக்கு முதல்வர் விஜய் வருகை: மக்களிடம் மனுக்களை பெற்றார்

சென்னை, 08 அக்டோபர் 2026: முதல்வர் விஜய், இன்று காலை தனது எம்எல்ஏ அலுவலகத்துக்குச் சென்று அங்கிருந்தவர்களிடம் புகைப்படம் எடுத்துக் கொண்டார். கடந்த சட்டமன்றத் தேர்தலில் முதல்வர் ஜோசப் விஜய் பெரம்பூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதன்பிறகு, அத்தொகுதியில் தனது எம்எல்ஏ அலுவலகத்தை அமைத்து, நிர்வாகிகளை அமர்த்தி பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்று, அவற்றை தன்னிடம் அனுப்பி வைக்கும் பணிகளில் செயல்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.



இந்நிலையில், மாதவரத்தில் உள்ள தமிழ்நாடு பால் கூட்டுறவு இணையத்தின் சார்பில் புதிதாக கட்டப்பட்ட ஆவினின் மாநில-மத்திய ஆய்வகத்தின் துணை கட்டிடத்தை இன்று காலை தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பங்கேற்று திறந்து வைத்தார்.

பின்னர் அவர் மூலக்கடை, கொடுங்கையூர் வழியாக திரும்பி செல்லும்போது எருக்கஞ்சேரி, சர்மா நகர் பகுதியில் உள்ள தனது பெரம்பூர் சட்டமன்ற தொகுதி அலுவலகத்துக்கு வருகை தந்தார். அங்கு மனுக்களை கொடுப்பதற்கு காத்திருந்த ஏராளமான பொது மக்களிடம் இருந்து பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான மனுக்களை பெற்றார். மேலும், பெரம்பூர் எம்எல்ஏ அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இதைத் தொடர்ந்து, தனது எம்எல்ஏ அலுவலகத்துக்கு வெளியே நின்றிருந்த தவெக தொண்டர்களுடன் செல்பி மற்றும் குழுப் புகைப்படம் எடுத்து கொண்டார். பின்னர் அங்கிருந்து முதல்வர் ஜோசப் விஜய் காரில் ஏறி கிளம்பி சென்றார். இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் சிவா உள்பட பல்வேறு அரசு அதிகாரிகள் மற்றும் தவெக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

## தமிழ்நாடில் தவெக வெற்றி பெற்றதற்கு முழு காரணம் என்ன..! அம்பலமான முழு உண்மை...

சென்னை 08, அக்டோபர் 2026: தமிழ்நாட்டில் தவெக ஒரு தொகுதியை கூட வெல்லாத 8 மாவட்டங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தில் மிக குறைந்த வாக்காளர்கள் மட்டுமே நீக்கப்பட்டது அம்பலமாகியுள்ளது.

2026 சட்டமன்ற தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக வெற்றிபெற்ற தவெக திமுக கூட்டணியில் இருந்து வெற்றி பெற்ற கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்தது, இந்த நிலையில் எஸ்ஐஆர் பணிகளில் வாக்காளர் நீக்கப்பட்டதன் எதிரொலியாக தேர்தல் முடிவுகளில் பெரும் மாற்றம் நிகழ்ந்தது அம்பலமாகியுள்ளது. குறிப்பாக தவெக ஒரு தொகுதியை கூட வெல்லாத 8 மாவட்டங்களில் எஸ்ஐஆர் இல் மிக குறைந்த வாக்காளர்களே நீக்கப்பட்டது அம்பலமாகியுள்ளது.




விழுப்புரம், யூன் காசி, கன்னியாகுமரி, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, அரியலூர், நீலகிரி ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள 33 தொகுதிகளில் தவெக ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறவில்லை எஸ்ஐஆர்க்கு முன்னும் பின்னும் உள்ள வாக்காளர் பட்டியலின் படி விழுப்புரத்தில் சராசரியாக ஒரு தொகுதியில் 20 ஆயிரத்து 119 பேர் நீக்கப்பட்டுள்ளார், கன்னியாகுமரியில் தொகுதிக்கு சராசரியாக 13 ஆயிரத்து 720பேர் எஸ்ஐஆர் இல் நீக்கப்பட்டுள்ளார், அரியலூரில் ஒரு தொகுதிக்கு சராசரியாக 7 ஆயிரத்து 936 பேர் மட்டுமே நீக்கப்பட்ட நிலையில் இந்த மாவட்டத்தில் ஒரு தொகுதியில் கூட தவெகவால் வெல்ல முடியவில்லை.

இதைப்போல நாகையில் தொகுதிக்கு சராசரியாக 13 ஆயிரத்து 261 பேரும், நீலகிரி மாவட்டத்தில் ஒரு தொகுதிக்கு 14 ஆயிரத்து 10 பேரும் நீக்கப்பட்டுள்ளனர், ஆளும் தவெக அனைத்து தொகுதிகளையும் இழந்த மயிலாடுதுறை மாவட்டத்திலும் குறைந்த அளவில் தொகுதிக்கு 18 ஆயிரத்து 94 பேர் நீக்கப்பட்டுள்ளனர், தென்காசி, திருவாரூரில் தொகுதிக்கு சராசரியாக 22 ஆயிரத்து 136 பேர் நீக்கப்பட்டுள்ள நிலையில் அந்த மாவட்டங்களிலும் தவெகவிற்கு புஜ்ஜியமே கிடைத்தது.

வாக்காளர்கள் அதிக அளவில் நீக்கப்பட்ட தொகுதிகளில் தவெக வெற்றி பெற்ற நிலையில் குறைந்த அளவில் வாக்காளர்கள் நீக்கப்பட்ட 8 மாவட்டங்களில் ஒரு தொகுதியில் கூட தவெக வெற்றி பெறாதது சந்தேகத்தை கிளப்பியுள்ளது.




## 25 ஆண்டுகளை நிறைவு செய்த பிரதமர் மோடி: எடப்பாடி பழனிசாமி, பிரேமலதா விஜயகாந்த் வாழ்த்து

சென்னை, 08 அக்டோபர் 2026: அரசுப் பொறுப்பில் 25 ஆண்டுகளை நிறைவு செய்த பிரதமர் மோடிக்கு எடப்பாடி பழனிசாமி, பிரேமலதா விஜயகாந்த் எக்ஸ் தளத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், அரசுத் தலைவராகத் தொடர்ந்து 25 ஆண்டுகள் பணியாற்றியுள்ள பிரதமர் மோடிக்கு மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். குஜராத் மாநிலம் முதல் இந்திய அரசின் தலைமைப் பொறுப்பு வரை அவர் மேற்கொண்ட இந்தச் சிறப்பான பயணம், இந்தியாவின் சமகாலப் பொதுவாழ்வில் ஒரு முக்கிய அத்தியாயமாகத் திகழ்கிறது.

பொதுச்சேவைக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த கால் நூற்றாண்டு காலம், மக்களின் னுதிர்பார்ப்புகள், சவால்கள் மற்றும் லட்சியங்களுடன் அவர் கொண்டுள்ள நீண்ட மற்றும் தொடர்ச்சியான ஈடுபாட்டைப் பிரதிபலிக்கிறது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லை எட்டியுள்ள நிலையில், மாண்புமிகு பிரதமருக்கு எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரவிருக்கும் ஆண்டுகள், தேச சேவையில் அவருக்குத் தொடர்ந்து வலிமையையும் அர்ப்பணிப்பு உணர்வையும் அளிக்கட்டும் என்று அவர் பதிவிட்டுள்ளார்.



இதனையடுத்து, தேமுதிகவின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், 2001 ஆம் ஆண்டு அக்டோபர் 7 ஆம் தேதி குஜராத் மாநில முதலமைச்சராகப் பொறுப்பேற்று தனது நிர்வாகப் பயணத்தைத் தொடங்கிய பிரதமர் மோடிக்கு, தொடர்ந்து 25 ஆண்டுகளாக அரசின் தலைமைப் பொறுப்பில் மக்கள் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்க சாதனையாகும். 2001 முதல் 2014 வரை குஜராத் மாநில முதலமைச்சராகவும், அதனைத் தொடர்ந்து 2014 முதல் இந்தியாவின் பிரதமராகவும் நாட்டிற்குப் பணியாற்றி வரும் அவர், தற்போது மூன்றாவது முறையாகத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் பொறுப்பை வகித்து வருகிறார்.

அரசின் தலைமைப் பொறுப்பில் 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள இத்தருணத்தில், பிரதமர் மோடிக்கு எனது சார்பிலும், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பிலும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டு மக்களின் நலனுக்காகவும், இந்தியாவின் வளர்ச்சிக்காகவும் அவர் மேற்கொள்ளும் மக்கள் பணி மேலும் பல ஆண்டுகள் தொடரவும், நல்ல உடல்நலத்துடனும் நீண்ட ஆயுளுடனும் தொடர்ந்து நாட்டிற்குச் சேவையாற்றவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என்று எக்ஸ் தள பதிவில் குறிப்பிட்டு உள்ளார்.

## 10-வது இந்திய மொபைல் காங்கிரஸ் மாநாட்டை அக்டோபர் 8 அன்று பிரதமர் தொடங்கி வைக்கிறார்

சென்னை 08, அக்டோபர் 2026: புதுதில்லியில் உள்ள யசோபூமியில் 10-வது இந்திய மொபைல் காங்கிரஸ் மாநாட்டை அக்டோபர் 8 அன்று காலை 10 மணிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார். அப்போது, அங்கு கூடியிருப்பவர்களுக்கிடையே அவர் உரையாற்ற உள்ளார்.

தொலைதொடர்புத் துறையும், இந்தியா செல்லுலார் செயல்பாட்டாளர் சங்கமும் இணைந்து நடத்தும் இந்த நிகழ்வு அக்டோபர் 10 வரை நடைபெறுகிறது. எல்லைகள் இல்லா விரிவாக்கம் என்ற கருப்பொருளில் இந்திய மொபைல் காங்கிரஸ் மாநாடு 2026 நடை பெற உள்ளது. இது டிஜிட்டல் புதுமை கண்டுபிடிப்பு, அடுத்த தலைமுறைக்கான இணைப்பு, தொழில் நுட்பம் சார்ந்த வளர்ச்சி ஆகியவற்றில் இந்தியாவின் வளர்ச்சியடைந்து வரும் திறன்களைப் பிரதிபலிக்கிறது.

எதிர்காலத்தைக் கட்டமைத்தல், வளர்ச்சியை ஊக்குவித்தல், வாய்ப்புகளை விரிவாக்குதல், நம்பிக்கையை வலுப்படுத்துதல் ஆகியவை இம்மாநாட்டின் நான்கு முக்கிய அம்சங்களாகும். இது புதுமை கண்டுபிடிப்பு, அடுத்த தலைமுறை டிஜிட்டல் உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம் சார்ந்த பொருளாதார வளர்ச்சி, அனைவரையும் உள்ளடக்கிய டிஜிட்டல் அணுகல், பாதுகாப்பான, உறுதியான டிஜிட்டல் சூழல் அமைப்புகளின் மேம்பாடு ஆகியவற்றின் கவனம் செலுத்தும்.




டிஜிட்டல் சூழலில் உருவாகும் வாய்ப்புகளை ஆராய்வதற்கு உலகளாவிய தொழில்நுட்ப தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள், துறைசார்ந்த நிபுணர்கள், புத்தொழில் நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், புதுமை கண்டுபிடிப்பாளர்கள் ஆகியோரை இம்மாநாடு ஒருங்கிணைக்கும்.

5ஜி, 6ஜி, அடுத்த தலைமுறை செயற்கை நுண்ணறிவு கட்டமைப்புகள், செமி கண்டக்டர்கள், புவிசாராத கட்டமைப்புகள், இணையப் பாதுகாப்பு, குவாண்டம் தகவல் தொடர்பு, சுழற்சி பொருளாதாரம், மின்னணு உற்பத்தி உள்ளிட்ட துறைகள் குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்படும்.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 1,50,000-க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

## அமேசான் கிரேட் இந்தியன் ஃபெஸ்டிவல் மற்றும் ஃபிளிப்கார்ட் பிக் பில்லியன் டேஸ் ஆகியவற்றின் போது டெலிவிஷன்களுக்கு 40% வரை தள்ளுபடிகளை ஹைசென்ஸ் இந்தியா நிறுவனம் அறிவித்துள்ளது

சென்னை 08, அக்டோபர் 2026: ஹைசென்ஸ் இந்தியா நிறுவனம், அமேசான் கிரேட் இந்தியன் ஃபெஸ்டிவல் 2026 மற்றும் ஃபிளிப்கார்ட் பிக் பில்லியன் டேஸ் 2026-இன் ஒரு பகுதியாக, தனது ஸ்மார்ட் டிவிக்களின் வரம்பில் கவர்ச்சிகரமான பண்டிகை சலுகைகளை அறிவித்துள்ளது. அமேசான் கிரேட் இந்தியன் ஃபெஸ்டிவல் 2026 அக்டோபர் 8 அன்று தொடங்குகிறது,

அதே நேரத்தில் ஃபிளிப்கார்ட் பிக் பில்லியன் டேஸ் 2026 அக்டோபர் 9 அன்று தொடங்குகிறது, தகுதியான வாடிக்கையாளர்களுக்கான முன்னணி அணுகல் அக்டோபர் 8 முதல் தொடங்குகிறது. வாடிக்கையாளர்கள் 40% வரை தள்ளுபடிகள், 50,000 ரூபாய் வரை கேஷ்பேக், பூஜ்ஜிய முன்பணம், வட்டியில்லா இஎம்ஐ மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹைசென்ஸ் தயாரிப்புகளில் இரண்டு ஆண்டுகள் வரை உத்தரவாதம் ஆகியவற்றைப் பெறலாம்.

பிரீமியம் வீட்டு பொழுதுபோக்குக்கு மேம்படுத்துவதை வெளிதாக்குகின்ற வகையில் இந்த பண்டிகை விற்பனையின் ஒரு பகுதியாக, ஹைசென்ஸ் ஸ்மார்ட் டிவிகளை வாங்கும் வாடிக்கையாளர்கள் கவர்ச்சிகரமான தள்ளுபடிகள் மற்றும் நெகிழ்வான நிதி விருப்பங்களின் கலவையைப் பெறலாம், தயாரிப்பு கிடைக்கும் தன்மை மற்றும் பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்தச் சலுகைகள் பரந்த அளவிலான தயாரிப்புகள் மற்றும் திரை அளவுகளில் பொருந்தும்.

இந்த பண்டிகைக் காலத்தில் இடம்பெற்ற ஹைசென்ஸ் டிவி தொகுப்பில் ஆர்ஜிபி மினிஎல்இடி யூஆர்8 எஸ், மினிஎல்இடி இ8எஸ், 4கே க்யூஎல் இடி இ75க்யூ மற்றும் 4கே எல்இடி இ6எஸ் வரிசைகள் அடங்கும். திரைப்படங்கள், விளையாட்டு, கேமிங் மற்றும் அன்றாட பார்வைக்கான அமர்க்களமான பொழுதுபோக்கு அனுபவங்களை விரும்பும் நுகர்வோருக்கு வழங்குகின்ற இந்தத் தொகுப்பு, வெவ்வேறு காட்சித் தொழில்நுட்பங்களையும் திரை அளவுகளையும் ஒன்றாகக் கொண்டு வருகிறது. இந்த பண்டிகைக்கால தொகுப்பில் மினிஎல்இடி இசட்670 எஸ்பி மற்றும் மினி டிம்மிங் இசட்570எஸ்பி வரிசைகள் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட டோசிபா தொலைக்காட்சிகளும் அடங்கும்.

ஹைசென்ஸ் இந்தியா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பங்கஜ் ரானா கூறுகையில், “இந்தியாவில் நுகர்வோர் மின்னணுவியல் துறைக்கு பண்டிகைக் காலம் மிக முக்கியமான காலங்களில் ஒன்றாக இருக்கிறது, மேலும் நுகர்வோர் மேம்பட்ட தொழில்நுட்பம், பிரீமியம் அனுபவங்கள் மற்றும் கவர்ச்சிகரமான மதிப்பு ஆகியவற்றின் கலவையை அதிகளவில் விரும்புவதை நாங்கள் காண்கிறோம். ஸ்ட்ரீமிங் மற்றும் விளையாட்டு பொழுதுபோக்கின் வளர்ந்து வரும் பிரபலத்துடன், நுகர்வோர் வீட்டிலேயே ஒரு மிகவும் ஆழ்த்துகின்ற, சினிமாத் தரமான பார்க்கும் அனுபவத்தை மீண்டும் உருவாக்க பெருமளவில் விரும்புவதால், பிரீமியம் மற்றும் பெரிய திரை டிவிக்களுக்கான தேவை வேகம் பெற்று வருகிறது. பரந்த அளவிலான டிவி தயாரிப்புகள் முழுவதிலும் எங்கள் பண்டிகைக்கால சலுகைகள் மூலம், இந்த காலகட்டத்தில் விற்பனையில் 40-50% உயர்வை நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆர்ஜிபி, யூஎல்இடி போன்ற மேம்பட்ட டிஸ்ப்ளே தொழில்நுட்பங்களை பரந்த அளவிலான திரை அளவுகள் மற்றும் விலைப் புள்ளிகளில் வழங்குவதன் மூலம், பிரீமியம் பார்வை அனுபவங்களை இந்திய நுகர்வோருக்கு மேலும் அணுகக் கூடியதாக மாற்றுவதே எங்கள் கவனமாகும்.” என்று கூறினார்.

## பழைய நிலைக்குத் திரும்பியது இலங்கை பொருளாதாரம்: உலக வங்கி அறிக்கை




சென்னை 08, அக்டோபர் 2026: இலங்கையின் பொருளாதாரம் 2018-ஆம் ஆண்டில் இருந்த பழைய நிலைக்குத் திரும்பியுள்ளது என்றும், 2026-ஆம் ஆண்டின் முதல் பாதியில் அதன் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.7 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது. 2022-இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு, இலங்கை தொடர்ந்து 12 காலாண்டுகளாக வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 4.4 சதவீதமாக இருக்கும் என கணித்துள்ள உலக வங்கி, 2027-இல் இது 4.2 சதவீதமாகக் குறையலாம் எனக் கூறியுள்ளது.

அதேவேளையில், இந்த மீட்புப் பணி முழுமையடையாமலும் சீரற்ற முறையிலும் உள்ளது என எச்சரித்துள்ளது. 2019 முதல் 2023 வரை சுமார் 20 லட்சம் மக்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டனர்.

2019-இல் 11.5 சதவீதமாக இருந்த வறுமை விகிதம், 2026-இல் 15.8 சதவீதமாக இருக்கும் என்றும், வறுமை இன்னும் பழைய நிலையை அடையவில்லை என்றும் உலக வங்கி அதிகாரி ஜேக்கப் ஏஞ்சல் தெரிவித்துள்ளார்.

## அர்ப்பணிப்புமிக்க சேவையின் நற்குணத்தை வலியுறுத்தும் சமஸ்கிருத நீதிமொழியைப் பிரதமர் பகிந்துள்ளார்

சென்னை 08, அக்டோபர் 2026: அர்ப்பணிப்புமிக்க சேவை, நேர்மையான நடத்தை, கடமையில் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தும் சமஸ்கிருத நீதிமொழியைப் பிரதமர் திரு நரேந்திர மோடி பகிர்ந்துள்ளார்.

மற்றவர்களுக்கு சேவையாற்றுவதும், ஒருவருடையப் பொறுப்புகளை நேர்மையுடன் நிறைவேற்றுவதும் நன்னடத்தையின் மிக உயர்ந்த பண்புகளில் ஒன்றாகும் என்று இந்த நீதிமொழி சுட்டிக்காட்டுகிறது. இது போன்ற அர்ப்பணிப்பு தகுதியையும், நற்பண்பையும் மட்டுமின்றி சமூகத்தில் நீடித்த



கௌரவத்தையும், அங்கீகாரத்தையும் பெறுவதாக இது தெரிவிக்கிறது.

## கேடிஎம் கப் முதல் ஆஸ்திரிய கிராண்ட் பிரிக்ஸ் வரை: கேடிஎம்-இன் மோட்டோஜிபி பந்தயத் திடலில் ஆறு ரைடர்கள்



சென்னை 08, அக்டோபர் 2026: உலகின் நம்பர் 1 பிரீமியம் மோட்டார் சைக்கிள் பிராண்டான கேடிஎம், கேடிஎம் சீசன் 3-இல் பங்கேற்ற ஆறு ரைடர்களை ஆஸ்திரியாவிற்கு அழைத்துச் சென்றது. அங்கு அவர்கள், ரெட் புல் கேடிஎம் ஃபேக்டரி ரேசிங் சூழலில் ஆஸ்திரியன் கிராண்ட் பிரிக்ஸ் வார இறுதியைக் கழித்ததோடு, பெட்ரோ அகோஸ்டாவைச் சந்தித்து, அந்த ஃபேக்டரியின் சொந்த மண்ணில் நடைபெறும் கிராண்ட் பிரிக்ஸில் அவர் தனது முதல் மோட்டோஜிபி வெற்றியைப் பெறுவதையும் கண்டுகளித்தனர்.

கோயம்புத்தூரில் உள்ள காரி மோட்டார் ஸ்பீட்வேயில் நிறைவடைந்த ஒரு சீசனுக்குப் பிறகு, புரோ பிரிவில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பிடித்த ஜோஹான் இம்மானுவேல் மற்றும் முகமது மிகைல்; Amateur பிரிவில் முதல் இரண்டு இடங்களைப் பிடித்த கார்த்திக் ஆர் மற்றும் ஜோபின் கர்மால்கி; மற்றும் மகளிர் பிரிவில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பிடித்த லானி ஸீனா பெர்னாண்டஸ் மற்றும் சைமா அஜாஸ் பெய்க் ஆகியோர் ஆஸ்திரியாவுக்குப் பயணம் செய்தனர்.

கேடிஎம் ரேசிங் ஃபேக்டரி மற்றும் கேடிஎம் மோட்டோஹாலில் பின்னனியில் நடக்கும் பணிகள் முதல், ஒரு மோட்டோஜிபி வார இறுதி நிகழ்வின் பின்னணியில் உள்ள தயாரிப்பு, தகவல் தொடர்பு மற்றும் குழுப்பணி வரை, ஆஸ்திரியாவில் அவர்கள் பந்தயத்தைப் பற்றிய ஒரு மாறுபட்ட கண்ணோட்டத்தை அனுபவித்தனர்.

ஜோஹான் இம்மானுவேலைப் பொறுத்தவரை, கேடிஎம் ரேசிங் ஃபேக்டரிக்குச் சென்ற பயணம், பந்தயத் தடத்திற்கு வெளியே ஒரு பந்தய காலத்தில் ஈடுபடும் அனைத்தையும் பற்றிய ஒரு புரிதலை அவருக்கு அளித்தது. மேலும், கேடிஎம்-இன் டாக்கர் பாரம்பரியத்தையும் அவர் கூர்ந்து கவனித்தார்.

“ஆஸ்திரியா பயணம் ஒரு அற்புதமான அனுபவமாக இருந்தது. கேடிஎம் ரேசிங் ஃபேக்டரியில் ஒரு பந்தைய காலத்தின் பின்னனியில் நடைபெறும் பணிகள் குறித்து நான் நிறைய கற்றுக்கொண்டேன். மேலும், டாக்கரில் கேடிஎம்-இன் வரலாறு மற்றும் அவர்களின் 20 ஆண்டுகால தொடர் வெற்றி என்னைக் உண்மையிலேயே கவர்ந்தது,” என்று ஜோஹான் கூறினார்.

## பெஷோட்டன் தஸ்தூர், குழுமத் தலைவர் & தலைமை - டிஜிட்டல், விற்பனை & தயாரிப்புகள், யூடிஐ ஏஎம்சி நிதி உறவு என்பது ஒரு நீண்ட கால முதலீடு

சென்னை 08, அக்டோபர் 2026: நிபுணத்துவ அறிவு தேவைப்படும் ஒரு முடிவை எடுக்கும்போது நாம் அனைவரும் நிபுணர்களை நம்பியிருக்கிறோம். நாம் நோய்வாய்ப்பட்டால் மருத்துவரை அணுகுகிறோம், அல்லது சட்டச் சவாலை எதிர்கொள்ளும்போது வழக்கறிஞரின் ஆலோசனையை நாடுகிறோம். ஆனால், பணத்தை நிர்வகிக்கும் விஷயத்தில், நம்மில் பலர் இந்த விஷயத்தைப் பற்றிய குறைந்த புரிதலுடனேயே முக்கியமான நிதி ரீதியான முடிவுகளை எடுக்க முனைகிறோம். செல்வம் சேர்ப்பது, குடும்பத்தின் எதிர்காலத்தைப் பாதுகாப்பது அல்லது வாழ்க்கையின் முக்கிய இலக்குகளை அடைவது போன்ற நல்ல நோக்கங்களுடனேயே நாம் முதலீடு செய்யத் தொடங்குகிறோம். ஆனால் போதுமான அறிவு இல்லாத நிலையில், ஒரு நண்பரின் பரிந்துரை, சமூக ஊடகங்களில் பிரபலமாக இருக்கும் பதிவுகள் அல்லது சந்தையில் சமீபத்தில் காணப்பட்ட ஏற்றங்களை நாம் பெரும்பாலும் நம்பியிருக்கிறோம். நன்கு திட்டமிடப்பட்ட நிதிப் பயணமாகத் தொடங்க வேண்டிய ஒன்று, துரதிர்ஷ்டவசமாக, அதன் முக்கிய நோக்கத்திலிருந்து விலகி அவசரமான அல்லது உணர்ச்சிவசப்பட்ட முடிவுகளின் தொடராக மாறிவிடுகிறது.

அனைவருக்கும் ஒரு நிபுணரின் வழிகாட்டுதல் தேவை; முதலீட்டு விஷயத்திலும் இது பொருந்தும்.

இங்குதான், ஒரு தொழில்முறை நிதியியல் நிபுணருடனான உறவு அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ஒரு மியூச்சுவல் ஃபண்டை தேர்ந்தெடுத்து மாதாந்திர எஸ்ஐபி-ஐ தொடங்குவது போல் முதலீடு எளிமையானதாகத் தோன்றலாம். ஆனால், அந்த முதலீடு உங்கள் நிதி இலக்குகளுக்கு, கால அளவிற்கு மற்றும் ஆபத்தை எடுத்துக் கொள்ளும் திறனுக்கு பொருந்துகிறதா என்பதே மிக முக்கியமான கேள்விகளாக இருக்கின்றன.

ஒவ்வொரு முதலீடும், அதன் தன்மையும் அளவும் மாறுபட்டாலும் ஒரு இயல்பான அளவு ஆபத்தைக் கொண்டுள்ளது. பங்கு முதலீடுகள் கடுமையான ஏற்ற இறக்கங்களை அனுபவிக்கலாம், அதே நேரத்தில் கடன் முதலீடுகள் வட்டி விகிதம், கடன் மற்றும் பணப்புழக்கம் ஆகிய அபாயங்களை எதிர்கொள்கின்றன.

ஒப்பீட்டளவில் நிலையான முதலீடுகள் கூட பண வீக்கத்திற்கு ஈடு கொடுக்க சிரமப்படலாம். இந்த அபாயங்களின் தாக்கம் காலத்திற்கு ஏற்ப மாறுகிறது. நீங்கள் ஓய்வு பெறுவதற்கு சற்று முன்பு ஏற்படும் ஒரு சந்தை திருத்தம், ஓய்வு பெறுவதற்கு பல தசாப்தங் கள் இருக்கும் இளம் முதலீட்டாளர் அனுபவிப்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்ட விளைவுகளை ஏற்படுத்தலாம். அதேபோல், இரண்டு ஆண்டுகளில் வீடு வாங்குவதற்காக சேமிக்கும் ஒருவர், 12-15 ஆண்டுகளுக்குப் பிறகு குழந்தையின் வெளிநாட்டுக் கல்விக்காக முதலீடு செய்பவரைப் போல சந்தை ஏற்ற இறக்கங்களை அணுக முடியாது.

இந்த வேறுபாடுகளைப் புரிந்து கொள்வது, தகவலறிந்த முதலீட்டு முடிவுகளை எடுப்பதற்கு அடிப்படையானது. முதலீட்டில் மிக முக்கியமான முடிவுகளில் ஒன்று, பங்கு, கடன் மற்றும் பிற முதலீடுகள் போன்ற சொத்து வகைகளுக்கு இடையே பணத்தை எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பதாகும். இது சொத்து ஒதுக்கீடு எனப்படும். இது முதலீட்டுத் தொகுப்பின் இடரையும், பல்வேறு சந்தை நிலைகளில் அதன் செயல்பாட்டையும் பாதிக்கிறது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# இந்தியாவின் வளர்ந்து வரும் ஓட்டப்பந்தய சந்தையில் டெகாத்லான் கவனம்; 50 லட்சம் ஆக்டிவ் ரன்னர்களை சென்றடைய கிப்ரன் திட்டம்




சென்னை 08, அக்டோபர் 2026: முன்னணி மல்டி-ஸ்பெஷலிஸ்ட் விளையாட்டு பிராண்டான டெகாத்லான் இந்தியா, தனது நிபுணத்துவ ஓட்டப்பந்தய துணை பிராண்டான கிப்ரன் பை டெகாத்லான்-க்கான விரிவான வணிக உத்தியை இன்று வெளியிட்டது. 2030ஆம் ஆண்டுக்குள் ஓட்டப்பந்தய விளையாட்டுப் பிரிவில் ரூ.1,000 கோடிக்கும் அதிகமான வருவாயை எட்டுவதுடன், ஹை-பெர்ஃபார்மன்ஸ் ரன்னிங் ஷூக்கள், ஆடைகள், ஹைட்ரேஷன் பேக்குகள், டிரெயில் கியர் மற்றும் ஆக்சஸரீஸ் உள்ளிட்ட முழுமையான தயாரிப்பு போர்ட்ஃபோலியோ மூலம் 50 லட்சத்துக்கும் அதிகமான ஆக்டிவ் ரன்னர்களை சென்றடைவதை நிறுவனம் இலக்காகக் கொண்டுள்ளது.

இந்த விரிவாக்கத்திற்கு மேலும் வேகம் அளிக்கும் வகையில், கிப்ரன் பை டெகாத்லான் இந்த ஆண்டில் தனது ரன்னிங் பிரிவில் 35 புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்துகிறது. இதில் அனைத்து நிலைகளிலுள்ள ரன்னர்களுக்கும் உலகத் தரத்திலான செயல்திறனை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட 17 ஹை-பெர்ஃபார்மன்ஸ் ரன்னிங் ஷூக்கள் முக்கிய இடம் பெறுகின்றன. மேலும், எதிர்கால வளர்ச்சியின் வேகத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்துவதற்காக புதிய தயாரிப்புகளின் விரிவான திட்டமும் உருவாக்கப்பட்டு வருகிறது.

இந்த அறிவிப்பு இந்தியாவின் விளையாட்டு கலாச்சாரத்தில் மாற்றம் ஏற்பட்டு வரும் முக்கியமான காலகட்டத்தில் வெளியாகியுள்ளது. நாடு முழுவதும் ஒழுங்கமைக்கப்பட்ட ரன்னிங் ரேஸ் நிகழ்வுகள் அதிகரித்து வரும் நிலையில், மேம்பட்ட தயாரிப்பு பொறியியல் மற்றும் அர்த்தமுள்ள சமூக ஈடுபாட்டின் மூலம் சந்தை வளர்ச்சியை வலுப்படுத்த கிப்ரன் திட்டமிட்டுள்ளது.

ஐஎம்ஏஆர்சி குரூப் தரவுகளின்படி, இந்தியாவின் ரன்னிங் கியர் சந்தை 2025ஆம் ஆண்டில் யூஎஸ்டி 2.5 பில்லியனில் இருந்து 2026ஆம் ஆண்டில் யூஎஸ்டி 2.7 பில்லியனாக வளர்ந்துள்ளது. 2034ஆம் ஆண்டுக்குள் இந்த சந்தை யூஎஸ்டி 4.9 பில்லியனை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேம்பட்ட குஷனிங், ரெஸ்பான்சிவ் ஃபோம் தொழில்நுட்பங்கள் மற்றும் கார்பன்-இன்ஃப்யூஸ்டு ஃபுட்வேர் போன்ற தொழில்நுட்ப புதுமைகளுக்கான அதிகரித்து வரும் தேவையும் டெகாத்லானின் பெர்ஃபார்மன்ஸ் ரன்னிங் போர்ட்ஃபோலியோவின் ’ளர்ச்சிக்கு ஆதரவளித்து வருகிறது.

புருனோ அராவ்ஜோ, கண்ட்ரி ஸ்போர்ட்ஸ் லீடர் - ரன்னிங், டெகாத்லான் ஸ்போர்ட்ஸ் இந்தியா, கூறுகையில், "இந்தியா தனது விளையாட்டு பயணத்தில் ஒரு முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளது. ரன்னிங் என்பது ஒரு குறிப்பிட்ட தரப்பினருக்கான ஃபிட்னஸ் செயல்பாடாக இருந்த நிலையிலிருந்து, தற்போது முக்கிய நீரோட்டத்தில் இடம்பெறும் சமூகத்தை மையமாகக் கொண்ட இயக்கமாக வேகமாக வளர்ந்து வருகிறது.

இந்தியாவுக்கான கிப்ரன்-ன் எங்கள் தொலைநோக்கு பார்வை, நாட்டின் ரன்னர்களுக்கான முதல் தேர்வு டெஸ்டினேஷனாக உருவெடுப்பதாகும். நாடு முழுவதும் உண்மையான விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிப்பதுடன், மில்லியன் கணக்கான இந்தியர்களின் முழுமையான நலனை மேம்படுத்தும் வகையில் ரன்னிங்கை தினசரி ஆரோக்கியமான பழக்கமாக மாற்றுவதே எங்கள் நோக்கம்."

# டெல்லி போலீஸ் சீருடையில் கேமரா பொருத்த 6 மாத காலக்கெடு: டெல்லி உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை 08, அக்டோபர் 2026: போராட்டங்களை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபடும் காவல்துறையினரின் சீருடையில் கேமராக்கள் பொருத்துவது தொடர்பாக உரிய வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க ஒன்றிய அரசுக்கு டெல்லி உயர்நீதிமன்றம் 6 மாத காலக்கெடு விதித்து உத்தரவிட்டுள்ளது.

காவல்துறையினர் போராட்டங்களின் போது மேற்கொள்ளும் நடவடிக்கைகளை வெளிப்படையாகப் பதிவு செய்யும் வகையில், போலீஸ் சீருடையில் கேமராக்களை பொருத்துவதை கட்டாயமாக்க வேண்டும் எனக் கோரி வழக்கறிஞர் ஒருவர் டெல்லி உயர்நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்திருந்தார். குறிப்பாக, டெல்லி ஜந்தர் மந்தரில் நடைபெற்ற போராட்டங்களின் போது காவல்துறையினர் அத்துமீறியதாகவும், போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மற்றும் பெண்கள் உள்ளிட்டோரிடம் காவலர்கள் முறைகேடாக நடந்து கொண்டதாகவும் மனுவில் குற்றம்சாட்டப்பட்டிருந்தது. இதனால், போராட்டங்களை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபடும் காவல்துறையினரின் சீருடையில் உடலில் பொருத்தக்கூடிய கேமராக்கள் பொருத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்க வேண்டும் என்றும் மனுதாரர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் நிதின் சாம்ரே மற்றும் அருண் பரத்வாஜ் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரரின் கோரிக்கையை மனுவாகக் கருதி, உரிய முடிவை எடுக்க ஒன்றிய அரசுக்கு 6 மாத கால அவகாசம் வழங்கலாம் என நீதிமன்றம் தெரிவித்தது. மனுவை கோரிக்கையாகக் கருதி பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக ஒன்றிய அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞரும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ஒன்றிய அரசின் தரப்பு அளித்த பதிலை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், போராட்டங்களின் போது காவல்துறையினரின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் வகையில் போலீஸ் சீருடையில் கேமராக்கள் பொருத்துவது தொடர்பாக உரிய வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து, மனுதாரரின் கோரிக்கை மீது 6 மாதங்களுக்குள் முடிவெடுக்குமாறு ஒன்றிய அரசுக்கு உத்தரவிட்டனர். போராட்டங்களின்போது காவல்துறையினரின் நடவடிக்கைகள் வெளிப்படையாகப் பதிவுசெய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ள நிலையில், டெல்லி உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

# உடல் பருமன் மற்றும் வளர்சிதை மாற்றப் பிரச்சனைகளுக்கென 'சமத்வா' சிறப்பு மையத்தை தொடங்கியது காவேரி மருத்துவமனை



சென்னை 08, அக்டோபர் 2026: உடல் பருமன் மற்றும் வளர்சிதை மாற்ற பிரச்சனைகளுக்கு விரிவான, ஒருங்கிணைந்த சிகிச்சை, அத்துடன் வாழ்க்கைமுறை மாற்றத்திற்கான பிரத்யேக வழிமுறைகளை தகுந்த நிபுணர்களைக் கொண்டு வழங்குவதற்காக காவேரி மருத்துவமனை - ரேடியல் ரோடு, 'சமத்வா' என்ற சிறப்பு மையத்தை தொடங்கியுள்ளது. இந்த மையத்தை தெலுங்கானா முன்னாள் ஆளுநரும், புதுச்சேரி முன்னாள் துணை நிலை ஆளுநருமான டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் இன்று தொடங்கி வைத்தார்.

உடல் பருமன் மற்றும் வளர்சிதை மாற்றம் தொடர்பான உடல் நல பிரச்சனைகள் அதிகரித்து வருகின்றன. சமீபத்திய தேசிய குடும்ப சுகாதார சர்வே-6 (2023-24)ன் படி, தமிழ்நாட்டில் 15 முதல் 49 வயதுடைய பெண்களில் 44.2% பேர் அதிக எடை அல்லது உடல் பருமனுடன் உள்ளனர். உடல் பருமன் பிரச்சனைகளுக்கு வழக்கமான எடைக் குறைப்பு திட்டங்கள் மட்டும் போதுமானதாக இருக்காது. ஒவ்வொரு நபரின் வளர்சிதை மாற்றம், ஊட்டச்சத்து, உடலியல் சார்ந்த நிலைகளுக்கு ஏற்ப தனியாக சிகிச்சை முறைகளை உருவாக்க வேண்டும். தவிர, தகுந்த வாழ்க்கை முறை மாற்றங்களும் அவசியம். எனவே இவை அனைத்தையும் மக்கள் ஒரே இடத்தில் ஒருங்கிணைந்த முறையில் பெறுவதற்காக சமத்வா மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

இம்மையத்தின் பல்துறை மருத்துவக் குழுவில் பொது மருத்துவர்கள், ஹார்மோன் நிபுணர்கள் (எண்டோக்ரினாலஜிஸ்ட்ஸ்), இரைப்பைக் குடல் மருத்துவ நிபுணர்கள், கல்லீரல் மருத்துவ நிபுணர்கள் மற்றும் பிற துறை நிபுணர்கள் இடம்பெற்றுள்ளனர். சமத்வா உடல் எடையை குறைப்பதில் மட்டும் கவனம் செலுத்தாமல், வளர்சிதை மாற்ற செயல்பாடுகளை மேம்படுத்துவதிலும், உடல் பருமனால் ஏற்பட வாய்ப்புள்ள பிற நோய்களை வராமல் தடுப்பதிலும், சரியான வாழ்க்கை முறைகளை பரிந்துரைப்பதிலும் கவனம் செலுத்தும்.

சமத்வா மையம் குறித்து காவேரி மருத்துவமனை ரேடியல் ரோட்டின் மருத்துவ இரைப்பைக் குடல் பிரிவின் மருத்துவத் தலைவர் டாக்டர் பியூஷ் பவானே பேசுகையில், "உடல் பருமன் வளர்சிதை மாற்ற பிரச்சனைகள் நீரிழிவு நோய், கொழுப்பு கல்லீரல் நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோய் போன்ற நோய்கள் தோன்ற காரணமாக அமையலாம். இந்த அபாயங்களை விரிவாக மதிப்பீடு செய்து, ஒவ்வொரு நோயாளிக்கும் ஏற்ற தகுந்த சிகிச்சைகளை சமத்வா மையம் வழங்கும்," என்றார்.

# 'ராமாயணா' திரைப்படத்தில் இருந்து மன்னர் தசரதராக அருண் கோவில் இடம்பெறும் புதிய போஸ்டர் வெளியானது!



சென்னை 08, அக்டோபர் 2026: தசரத மன்னராக அருண் கோவில் இடம்பெறும் புதிய போஸ்டரை 'ராமாயணா' படக்குழு வெளியிட்டுள்ளது. இதன் மூலம், இந்திய ரசிகர்களின் மனதில் நீங்கா இடம்பிடித்த ராமர் கதாபாத்திரத்துடன் அடையாளம் காணப்படும் அருண் கோவிலுக்கு இது முக்கியமான புதிய அத்தியாயமாக அமைந்துள்ளது. புதிதாக வெளியிடப்பட்டுள்ள இந்த போஸ்டரில், ராமரின் தந்தையும் அயோத்தி மன்னருமான தசரதராக அருண் கோவில் காட்சியளிக்கிறார். இரண்டு பாகங்களாக உருவாகி வரும் இந்த பிரம்மாண்ட திரைப்படத்தில், அவரது கதாபாத்திரத்தின் முதல் தோற்றத்தை ரசிகர்களுக்கு இந்த போஸ்டர் அறிமுகப்படுத்துகிறது.

முன்பு, இந்திய ரசிகர்களால் ராமராகப் போற்றப்பட்ட அருண் கோவில், தற்போது அயோத்தியின் மன்னரும் ராமரின் தந்தையுமான தசரதராக 'ராமாயணா' திரைப்படத்தில் நடிக்கிறார். ராமாயணத்துடன் ஆழ்ந்த உணர்வுப்பூர்வமான பிணைப்பைக் கொண்டுள்ள ஒரு நடிகர், தற்போது அதே காவியத்தில் முக்கியத்துவம் வாய்ந்த மற்றொரு கதாபாத்திரத்தில் நடிப்பது படத்திற்கு சிறப்பு சேர்த்துள்ளது.

படக்குழு தங்களது சமூக வலைதளப் பக்கங்களில் புதிய போஸ்டரை வெளியிட்டு, "ஒரு தலைமுறைக்கே ராமராக இருந்தவர், தற்போது அயோத்தி மன்னர் தசரதராக அருண் கோவில் ராமாயண உலகிற்கு மீண்டும் திரும்புகிறார்" என பதிவிட்டுள்ளது.

இந்த போஸ்டரில் தசரத மன்னரின் கம்பீரமான தோற்றத்தில் அருண் கோவில் காட்சியளிக்கிறார். அவரது தோற்றத்திலும் ஆடை அலங்காரத்திலும் அயோத்தி மன்னருக்குரிய கம்பீரமும் அதிகாரமும் பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக ராமராக அவரைப் பார்த்து வளர்ந்த ரசிகர்களுக்கு, தற்போது அவர் ராமரின் தந்தையான தசரதராக நடித்திருப்பது படம் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது.

நிதேஷ் திவாரி இயக்கும் 'ராமாயணா' திரைப்படத்தில், ரன்பீர் கபூர் ராமராகவும், சாய் பல்லவி சீதையாகவும், ராக்கிங் ஸ்டார் யஷ் ராவணனாகவும், சன்னி தியோல் அனுமனாகவும், ரவி துபே லட்சுமணனாகவும் நடித்துள்ளனர். இந்த திரைப்படம் இந்தியா முழுவதும் இந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் ஐமேக்ஸ் திரையரங்குகளிலும் வெளியாகிறது. இந்தியாவைத் தவிர உலகளாவிய விநியோகத்தை சோனி பிக்சர்ஸ் மேற்கொள்கிறது. இந்தி பேசும் சந்தைக்கான விநியோகத்தை தர்மா புரொடக்ஷன்ஸ் மேற்கொள்ளவுள்ளது.

## திருநர் சமூகத்தை இதுநாள் வரை பார்த்த பார்வையை இந்த படம் நிச்சயம் மாற்றும் - இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ்



சென்னை 08, அக்டோபர் 2026: ஜியோ ஸ்டுடியோஸ் வழங்கும், சிக்யா என்டர்டெயின்மென்ட் மற்றும் தம்மம் ஃபிலிம்ஸ் தயாரிப்பில், கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில், நடிகர்கள் ரிஷிகாந்த், சனந்த், கீர்த்தி சுரேஷ் நடிப்பில் வெளியான திரைப் படம் 'டோரதி'. வணிக ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் ரசிகர்கள் மத்தியில் படம் வரவேற்பு பெற்று வருகிறது. இதனையடுத்து படத்தின் நன்றி தெரிவிக்கும் நிகழ்வு இன்று நடைபெற்றது.

தயாரிப்பாளர் அச்சின் ஜெயின், "இந்த படம் சிறந்த அனுபவமாக மாற்றி கொடுத்த ரசிகர்களுக்கும் படக் குழுவினருக்கும் நன்றி".

ஷபிதா, "கடந்த 16 வருடங்களாக திருநங்கை மற்றும் திருநர் சமூகத்திற்காக வேலை பார்த்து வருகிறோம். நிறைய விழிப்புணர்வு ஏற்படுத்தி வந்தாலும், நிறைய படங்கள் வந்திருந்தாலும் 'டோரதி' எப்போதுமே ஸ்பெஷல். படம் பார்த்து முடித்ததும் தேம்பி தேம்பி அழ ஆரம்பித்துவிட்டேன். எங்கள் சமூகத்தின் குரலாக இந்தப் படம் உள்ளது. நிஜ வாழ்க்கையிலும் என்னை ஏற்றுக் கொண்டது என் அண்ணி தான். அதனால், 'டோரதி' என்னை நெகிழ வைத்தது. திருநங்கைகள் திருமணமே செய்து கொள்ளலாம் என சட்டமே வந்து விட்டது. அப்படி இருக்கும் போது இந்த படத்தின் கிளைமேக்ஸில் என்ன பிரச்சினை? திருநர் சமூகம் இன்னும் பல உயரத்திற்கு செல்வார்கள். அதற்கு இந்த படமே சாட்சி".

மாளவிகா, "கார்த்தி-ஹீரோ, சுப்பு-ஹீரோயின், ராஜ்-இளையராஜா சார் என கார்த்திக் சுப்புராஜாக இணைந்து 'டோரதி' படம் உருவாகியிருக்கிறது. படத்தின் ஒவ்வொரு காட்சியும் கண்ணில் ஒத்திக்கொள்ளலாம். ரிஷிகாந்த், சனந்த் என இரண்டு அற்புதமான நடிகர்களை கார்த்திக் சுப்புராஜ் வெளிக்கொண்டு வந்துள்ளார். எங்களை மதிக்கவில்லை என்றாலும் எங்களை அவமானப்படுத்தாதீர்கள். இந்த வருடம் நமக்கு கிடைத்த பரிசு 'டோரதி'. நிச்சயம் ஆஸ்கர் விருது கிடைக்க வேண்டும். ஊரோரம் புளியமரம் என யுவன் சங்கர் ராஜா கொடுத்த கசப்பான பாடல் அனுபவத்தை அவரது அப்பா இளையராஜா மீனாட்சி, காமாட்சி எனப் பாடல் கொடுத்து நீக்கிவிட்டார். அனைவருக்கும் நன்றி".

சுபா, "இந்த சமூகத்திற்கான புரட்சிதான் இந்தப் படம். 'பாம்பே', 'காஞ்சனா', 'அருவி' போன்ற படங்களில் திருநர் சமூகத்தை சிறப்பாக காட்டியிருப்பார்கள். ஆனால், ஜென்ஸீ காலத்தில் 'டோரதி' பேசியிருக்கும் விஷயம் மிக முக்கியமானது. 2050 வரை சிந்திக்க வைக்கும் படமாக இது வெளியாகியுள்ளது. வியாபார நோக்கத்தில் இல்லாமல் சமூக நோக்கத்தில் இந்தப் படத்தை இயக்குநர் உருவாக்கி இருக்கிறார். சனந்த், ரிஷிகாந்த் இருவருக்கும் நல்ல எதிர்காலம் உள்ளது. நாம் எல்லோரும் இணைந்து செயல்படுவோம்" என்றார்.

இயக்குநர் மிஷ்கின், "'டோரதி' திரைப்படம் மூலம் திருநர் சமூகத்தை மிக உயர்ந்த இடத்திற்கு கார்த்திக் சுப்புராஜ் எடுத்து சென்றுள்ளார். சீர்கெட்ட சமூகத்தை 'டோரதி' மூலம் தூக்கி நிறுத்தியுள்ளார். வசூலை தாண்டி சிறந்த படமாக இது காலத்திற்கும் நிற்கும். இளையராஜாவை அடுத்து நான் கார்த்தி காலில்தான் விழ வேண்டும். இந்த படத்தையும் விமர்சனம் செய்ய வேண்டும். நம் எல்லோரையும் விட வாழ்க்கையை நன்கு புரிந்தவர்கள் திருநங்கைகள். சகிப்புத்தன்மையை இந்தப் படம் நமக்கு சொல்லி தருகிறது. காதுகள் இருப்பது இளையராஜா இசை கேட்க, கண்கள் இருப்பது டோரதி போன்ற படங்கள் பார்க்க. கடைசி விவசாயி, கொட்டுக் காளி படங்களை விட 100 மடங்கு சிறப்பான படம் டோரதி. மாஸ் ஹீரோ டெம்ப்ளேட்டை உடைத்து ரிஷி, சனந்த் பெரிய ஹீரோவாகி இருக்கிறார்கள். பெரிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. கீர்த்தி இந்தப் படத்தின் உயிர். நன்றி".

இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ், " சினிமா வலுவான ஆயுதம். மக்கள் மனதை மாற்றும் சக்தி கொண்டது. திருநர் சமூகத்தை இது நாள் வரை பார்த்த பார்வையை இந்த படம் நிச்சயம் மாற்றும் என பலர் என்னிடம் சொன்னார்கள். அது தான் இந்த படத்தின் வெற்றி என கருதுகிறேன். என்னுடைய தனிப்பட்ட வெற்றியாகவும் பார்க்கிறேன். எங்களுக்கு கிடைத்த ஆசிர்வாதம் ராஜா சார் இசை. படத்தின் இன்னொரு ஹீரோ திரு சார். அனைவருக்கும் நன்றி" என்றார்.

## சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை பணியாளர்களுக்கான வாராந்திர குறைதீர்க்கும் கூட்டம்



சென்னை 08, அக்டோபர் 2026: தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை பணியாளர்களின் நலனை மையமாகக் கொண்ட அணுகுமுறையின் ஒரு பகுதியாக, காவல்துறை தலைமை இயக்குநர் / சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் முனைவர் சந்தீப் ராய் ரத்தோர், இ.கா.ப., அவர்கள் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் துறை பணியாளர்களுக்கான குறை தீர்க்கும் கூட்டத்தை நடத்தி வருகிறார்.

இக்குறைதீர்க்கும் கூட்டத்தில், துறையின் சீருடைப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் தங்களது பணிசார்ந்த கோரிக்கைகள், பணியிட மாறுதல் கோரிக்கைகள் மற்றும் இதர குறைகள் தொடர்பான மனுக்களை துறைத் தலைவரிடம் நேரடியாக அளித்து தீர்வு காண வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

06.10.2026 அன்று நடைபெற்ற குறை தீர்க்கும் கூட்டத்தில், சுமார் 75 மனுக்கள் தலைமை இயக்குநர் அவர்களால் நேரடியாகப் பெறப்பட்டன. கடந்த மூன்று மாதங்களில், சுமார் 750 குறை தீர் மனுக்கள் பெறப்பட்டுள்ள நிலையில், அவற்றில் சுமார் 400 மனுக்களுக்கு உரிய விதிமுறைகள் மற்றும் நிர்வாக நடைமுறைகளுக்கு உட்பட்டு, இந்த வாராந்திர குறை தீர்க்கும் நடவடிக்கையின் மூலம் சாதகமான முறையில் தீர்வு காணப் பட்டுள்ளது. மீதமுள்ள மனுக்கள் ஒவ்வொன்றின் தகுதி மற்றும் உரிய காரணிகளின் அடிப்படையில் பரிசீலிக்கப் பட்டு வருகின்றன.

மேலும், பணியிட மாறுதல் கோரிக்கைகளைப் பரிசீலிக்கும் போது, தகுதியான மற்றும் உண்மையான கோரிக்கைகளுக்கு உரிய முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், குறிப்பாக ஒற்றைப் பெற்றோர் (சிங்கிள் பேரண்ட்), கணவன் - மனைவி இருவரும் பணிபுரியும் அடிப் படையிலான கோரிக் கைகள் (ஸ்பௌஸ் எம்ப்ளாய்மெண்ட் க்ரவுண்ட்ஸ்), பணி ஒய்வை நெருங்கியுள்ள பணியாளர்கள் மற்றும் தீவிர மருத்துவக் காரணங்களைக் கொண்ட பணியாளர்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து பரிசீலிக்கப்படும் என்றும் தலைமை இயக்குநர் தெரிவித்தார்.

இவ்வாராந்திர குறைதீர்க்கும் நடைமுறையின் மூலம், பணியாளர்கள் தங்களது குறைகளை துறைத் தலைவரிடம் நேரடியாக எடுத்துரைக்கவும், நியாயமான கோரிக்கைகளுக்கு விரைவாக தீர்வு பெறவும், வெளிப்படையான மற்றும் பணியாளர் நலன் சார்ந்த நிர்வாகத்தை மேலும் வலுப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை பணியாளர்களின் நலனுக்காக தொடர்ந்து ஆதரவும் வழிகாட்டுதலும் வழங்கி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

## சிபிராஜ் தயாரித்து நடிக்கும் புதிய திரைப்படம்: 'ஜீப்ரா' பட இயக்குநர் ஈஷ்வர் கார்த்திக் இயக்குகிறார்!



சென்னை 08, அக்டோபர் 2026: 'எண்ணிக்கையை விடத் தரமே முக்கியம்' எனும் பாதையில், ரசிகர்களைக் கவரும் வகையில் வித்தியாசமான கதைக் களங்களையும் கதாபாத்திரங்களையும் தேர்ந்தெடுத்து நடித்து வருபவர் நடிகர் சிபிராஜ். திரையரங்கம் மற்றும் ஓடிடி தளம் என அனைத்துத் தளங்களிலும் வெற்றிப் படங்களை வழங்கி வரும் அவர், தற்போது திரைத் துறையில் அடுத்த கட்டமாகத் திரைப்படத் தயாரிப்பில் களமிறங்கியுள்ளார்.

தனது பிறந்தநாளான இன்று, "அண்டர்டாக் ஃபிலிம்ஸ்" எனும் புதிய திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தை சிபிராஜ் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியுள்ளார்.

இந்நிறுவனத்தின் முதல் தயாரிப்பான 'புரொடக்ஷன் நம்பர் 1' திரைப்படத்தின் படப்பிடிப்பு ஏற்கனவே தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. சமீபத்தில் பிளாக்பஸ்டர் வெற்றியைப் பெற்ற 'ஜீப்ரா' திரைப்படத்தை இயக்கிய இயக்குநர் ஈஷ்வர் கார்த்திக் இத்திரைப்படத்தை இயக்குகிறார்.

இப்படத்தில் சிபிராஜ் கதாநாயகனாக நடிப்பதுடன், அவரே தயாரித்தும் வருகிறார். இதன் மூலம் நடிகராகவும் தயாரிப்பாளராகவும் தனது திரைப் பயணத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்குகிறார் சிபிராஜ்.

சிபிராஜ் மற்றும் ஈஷ்வர் கார்த்திக் கூட்டணியில் உருவாகும் இத்திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இப்படத்தின் கதை, வகை (Genre) மற்றும் பிற நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் குறித்த விவரங்கள் தற்போது இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன. விரைவில் படக்குழுவினரின் விவரங்கள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட இருக்கிறது.

## 13 ராணுவத்தினரை சுட்டு கொன்ற வழக்கு முன்னாள் ராணுவ மேஜருக்கு துப்பாக்கிச்சூடு மூலம் மரண தண்டனை: அமெரிக்க அதிபர் டிரம்ப் ஒப்புதல்



சென்னை 08, அக்டோபர் 2026: கடந்த 2009-ம் ஆண்டு அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் ஃபோர்ட் ஹூட் ராணுவத் தளத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 13 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். 30க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இந்த வழக்கில் ராணுவ மேஜர் நிடால் மாலிக் ஹசன் கைது செய்யப் பட்டார். ஆப்கானிஸ்தானுக்கு சென்று முஸ்லிம்களுக்கு எதிராக அமெரிக்க ராணுவம் போரிடுவதைத் தடுக்கவே இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஹசன் தெரிவித்திருந்தார். விசாரணையின் போது, துப்பாக்கிச்சூடு நடத்தியது தான்தான் என்பதை ஒப்புக் கொண்ட இந்த வழக்கில் நிடால் மாலிக் ஹசனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவரை துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனையை நிறைவேற்ற அமெரிக்க அதிபர் டிரம்ப் ஒப்புதல் அளித்துள்ளார். டிரம்பின் ஒப்புதல் தண்டனையை நிறைவேற்றுவதற்கான நடைமுறைகளைத் தொடங்க வழிவகுத்துள்ளது.

எனினும், ஹசன் மேல்முறையீடு செய்வதன் மூலம் தண்டனையை பல ஆண்டுகளுக்கு தாமதப்படுத்தும் வாய்ப்பு உள்ளது. ராணுவத்தில் கடந்த 1961-ம் ஆண்டுக்குப் பிறகு மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை. ராணுவத்தில் கடைசியாக 1961-ல் ஜான் பென்னட் தூக்கிலிடப்பட்டார். ஹசனுக்கு தண்டனை நிறைவேற்றும் தேதி, இடம் ஆகியவற்றை ராணுவச் செயலர் முடிவு செய்வார் என்று பென்டகன் செய்தித் தொடர்பாளர் சீன் பார்னெல் எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்